www.tamilarangam.net



# ராஜீவ் கொலைச் சம்பவம் ஏன் நிகழ்ந்தது? கட்டுரைத் தொடர் - 12

தாமரை காருண்யன்



**ஈழம் தோல்வி கண்டதா?**
**தோற்கடிக்கப்பட்டதா?**

நாம் கடந்த சில அங்கங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புபட்ட கெடுபிடி யுத்தக்கால புவிசார் அரசியல் நிலைமைகளின் சில அம்சங்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிக் கவனம் செலுத்தியிருந்தோம்.

இந்த அங்கம் கெடுபிடி யுத்தத்திற்குப் பின்னரான காலத்து புவிசார் அரசியலுக்குள் (Post- cold war geo politics) காலடி வைக்கிறது.

சோவியத் யூனியன் சிதறி உடைந்து போய் - உலகம் இரட்டை மையை உலக ஒழுங்கிலிருந்து மாறி அமெரிக்கா தலைமையிலான மேற்குலகத்தின் ஆளுகைக்குள் உள்ளாகி - ஒற்றை மைய உலக ஒழுங்கு உருவாகியமையே கெடுபிடிப் போரின் பின்னரான காலத்து புவிசார் அரசியல் அம்சங்களில் முக்கியமானது.

இந்த ஒற்றை மைய உலக ஒழுங்கு நிரந்தரமானது அல்ல – காலச் சுழற்சிக்குள் ஒற்றை மைய உலக ஒழுங்கிலிருந்து உலகம் விடுபட்டு பல்மைய உலக ஒழுங்கினுள்(Multi-polar world order) நுழைந்து கொள்ளும் எனவும் சில ஆய்வார்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

உலகம் பல்மைய உலக ஒழுங்கினுள் நுழைவது என்பது உலக நாடுகள் இரண்டிற்கு மேற்பட்ட – மூன்றோ அல்லது நான்கு முகாம்களை - மையமாக வைத்து அணிதிரளும் நிலை உருவாகுவதனைக் குறித்து நிற்பது.

உலகம் பல்மைய உலக ஒழுங்கினுள் நுழைவதன் ஆரம்பப்படியாக ஒற்றை மைய உலக ஒழுங்கு பலவீனமடையும் எனவும் உலகின் வலுவுள்ள சக்திகளாக பிராந்திய அடிப்படையிலோ அல்லது ஏனைய உறவுகளின் அடிப்படைகளிலோ எழும் கூட்டுக்கள் எழுச்சியடையும் என்றும் எதிர்வு கூறப்பட்டது.

சீனா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகள் தேர்வு செய்திருந்த பொருளாதார வளர்ச்சிப்பாதையும் - உலக வல்லரசுகளாவதற்கு இவை போன்ற நாடுகள் கொண்டிருந்த பெருவிருப்பும் - இஸ்லாம் அரசியலின் எழுச்சியும் - சோவியத் உடைந்து போனாலும் ரஷ்யாவிடம் இருந்த மேற்குலக எதிர்ப்புப் போக்கும் - பல்மைய உலக ஒழுங்கு உருவாகும் என்ற இந்த எதிர்வுகூறலின் பின்னணியில் இருந்தன.

ஒற்றைமைய உலக ஒழுங்கு திடமடைந்து விடுவதற்கு முன்னர் தமது நாடுகளைப் பலப்படுத்துவதில் புதிய வல்லரசுகளாக உருவாகுவதற்கு வியூகம் வகுத்திருந்த நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் கூடிய கவனம் செலுத்தத் தொடங்கியிருந்த காலகட்டம் இது.

தென்னாசிய மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தினையும் தாண்டி உலகின் புதிய வல்லரசாக தன்னை நிலைநிறுத்துவதற்கான வியூகத்தினை இந்தியாவும் வகுத்துக் கொண்டிருந்த காலகட்டம் அது.

இருந்த போதும், இக் காலகட்டத்தில் இந்தியாவில் நிலவிய ஸ்திரமற்ற அரசியற் சூழல் இதற்குரிய காத்திரமான படிகளை எடுத்து வைக்கப் பெரிதும் ஒத்துழைப்பதாக இருக்கவில்லை.

கடந்த அங்கத்தில் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ராஜீவ் காந்தி தோல்வியடைந்து வி.பி. சிங் பிரதமராகப் பதவியேற்றிருந்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்தோம்.

உண்மையில் 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் ராஜீவ் காந்தி தலைமையிலான அகில இந்தியக் கொங்கிரஸ் கட்சியே கூடுதல் ஆசனங்கள் பெற்ற தனிப் பெரும் கட்சியாக இருந்தது. ஆனால் கொங்கிரஸ் கட்சியால் ஏனைய கட்சிகளின் ஆதரவினைப் பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க முடியவில்லை.

எதிர்க் கட்சிகளின் கூட்டாக அமைந்திருந்த ஜனதாதள் சார்பில் வி.பி.சிங் பிரதமராக – பாரதீய ஜனதாக் கட்சியின் ஆதரவுடன் - பதவியேற்றிருந்த போதும் அவரது அரசு சிறுபான்மை அரசாகத்தான் இருந்தது.

ஜனதாதள் அரசாங்கத்துக்குள் குழப்பம் ஏற்பட்டு உடைவு ஏற்பட 1990 ஆண்டு நவம்பர் மாதம் ராஜீவ் காந்தி தலைமையிலான கொங்கிரஸின் ஆதரவுடன் ஜனதாதள்ளின் ஒரு பிரிவின் தலைவர் சந்திரசேகர் பிரதமராகப் பதவியேற்கிறார். இவரது ஆட்சிக்காலமும் நீண்டகாலம் நீடிக்கவில்லை. கொங்கிரஸ் ஆதரவினை விலக்கிக் கொள்ள அரசு கவிழ்கிறது. புதிய தேர்தல் 1991 ஆம் ஆண்டு யூன் மாதம் அறிவிக்கப்படுகிறது.

இத் தேர்தல் ஊடாக, புதிய உலக ஒழுங்கில் இந்தியாவினை நிலைநிறுத்தக்கூடிய ஸ்திரமான அரசியல் தலைமையினை உருவாக்குவதற்கான முயற்சியில் இந்தியதேசம் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் - தென்னாசிய மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியங்களை மட்டுமல்ல – உலகையே அதிர வைத்த அந்தச் சம்பவம் நிகழ்கிறது.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி தமிழ் நாட்டில் சிறிபெரும்புதூரில் தேர்தல் பரப்புரைக்கு வந்திருந்த ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டு மூலம் கொல்லப்படுகின்றார். இவருடன் மேலும் 18 பேரும் இச் சம்பவத்தில் கொல்லப்படுகின்றனர்.

விசாரணைகள் விடுதலைப்புலிகள் மீது குற்றத்தை சுமத்துகின்றன. சம்பவம் நிகழ்ந்து ஒரு வருட காலம் நிகழ்ந்த விசாரணைகளில் 5000 பேர் விசாரணைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பலர் கைது செய்யப்படுகின்றனர். முக்கிய சந்தேக நபரான சிவராசன் உட்பட சிலர் தம்மைத் தாமே அழித்தும் கொள்கின்றனர்.

புதினங்கள்

மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும்
பல வகுப்பறைகள் மரங்களுக்குக் கீழே நடக்கின்றன
ஊரான ஊரிழந்தோம்! ஒற்றைப் பனைத் தோப்பிழந்தோம்!!
வன்குரலுக்கு எதிரான கலகக் குரல்
தலைவர் பிரபாகரன் வீரச்சாவு குறித்து தொடரும் சர்ச்சை: காரணங்கள் எவை? கட்டுரைத் தொடர் - 17
நக்கீரனுக்கு ஏன் இந்தக் கோடாலிக் காம்பு வேலை?
முள்ளிவாய்க்கால் படுகொலையின் தத்துவப் பின்னணி
கிழக்கில் கிடந்த பச்சைச் சூரியன்!
தேசியத் தலைவருக்கு விளக்கு வைக்கத் துடிக்கும் மார்க் அன்ரனிகள்

செய்திகள்

முகாம்களுக்கு செல்லவிடாது தடுப்பது விடயங்களை ஒளித்து மறைக்க விரும்புபவர்களின் செயல்! கூட்டமைப்பு அறிக்கை
உள்விவகாரங்களில் தலையிட வேண்டாம்' - பான் கீ மூனுக்கு சிறிலங்கா கோரிக்கை!
விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தலாம்! - அதனால் தடை என்கிறது இந்தியா!
'எங்களது வாகனங்கள் எங்கே?' - கிளிநொச்சியில் தமது வாகனங்களைத் தேடும் மக்கள் கேள்வி!
இனப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டிவிடும் என எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகியுள்ளனர்: செல்வம் அடைக்கலநாதன்
சிறிலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான விவகாரங்கள்: பசில் ராஜபக்சவே கையாள்வார்!
நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளை பொதுமக்கள் பார்வையிட முடியாது!